விலை ரூபா 1.25

# ஈழநாடு

THE EELANADU

NATIONAL TAMIL DAILY

மலர் 26 சித்திரை 19 றஜப் 28 இதழ் 76

யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 1—5—84

## கொழும்பில் வழமைபோல் மே தினம்
# யாழ். நகரில் ஆரவாரமில்லை

(யாழ்ப்பாணம்)

இன்று யாழ்ப்பாணத்தில் மே தினம் வழமைபோல் பொதுக்கூட்டம், ஊர்வலங்களுடன் கொண்டாடப்படாவிட்டாலும் நாட்டின் ஏனைய பகுதிகளில் வழமைபோல் உதாரணமாகக் கொண்டாடப்படுகின்றது. குறிப்பாக கொழும்பு நகரில் பல்வேறு அரசியல் கட்சிகளும் தொழிற் சங்கங்களும் தமது மே தினக் கூட்டங்களை நடத்துகின்றன. கொழும்பு மாநகரில் மாத்திரம் பதினொரு கூட்டங்களும் ஆறு ஊர்வலங்களும் நடைபெறவிருக்கின்றன.

ஐ. தே. கட்சியின் மே தினக் கூட்டம் கொழும்பு காலிமுகத் திடலில் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தன தலைமையில் நடைபெறும். பிரதமமந்திரி, தொழிற்சங்கவாதிகள், பிரமுகர்கள் இக் கூட்டத்தில் கலந்துகொள்கின்றனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் கூட்டம் கொழும்பு ஹைட்பார்க்கில் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தலைமையில் நடைபெறும். கொட்டாஞ்சேனை ரத்தினம் மைதானத்தில் இக் கட்சியின் ஊர்வலம் ஆரம்பமாகும்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சியின் கூட்டம் ஹட்டனிலும், இலங்கை ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் கூட்டம் அக்கரப் பத்தனையி

(8-ம் பக்கம் பார்க்க)

### தமிழர் பிரச்னைக்கு நிரந்தரத் தீர்வு ஏற்பட
# இலங்கை-இந்திய பிரதமர்கள் சந்தித்துப் பேச வேண்டும்!

## தமிழ்நாடு அமைச்சர் யோசனை
### யாழ்ப்பாணத்திலிருந்து ராணுவத்தை நீக்கவும் கோரிக்கை

(சென்னை)

"இலங்கை பிரதமந்திரி திரு. ஆர். பிரேமதாசாவும் இந்திய பிரதமந்திரி திருமதி இந்திரா காந்தியும் நேரடியாகச் சந்தித்து இலங்கைத் தமிழர் பிரச்னை பற்றிப் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு நிரந்தரமான தீர்வு காண்பதற்கு இது உதவும்."

தமிழ்நாடு மின்சாரத் துறை அமைச்சர் திரு எஸ். ராமச்சந்திரன் இந்த யோசனையைத் தெரிவித்துள்ளார்.

கடலூரில் நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில் திரு. ராமச்சந்திரன் இக்கருத்தை வெளியிட்டார்.

இலங்கைத் தமிழர் பிரச்னையைத் தீர்க்க வேண்டுமென்பதில் இலங்கை அரசுக்கு உண்மையிலேயே அக்கறை இருக்குமானால் தமி

[8-ம் பக்கம் பார்க்க]

## "ராணுவத்தை அனுப்புவது புத்திசாலித் தனமில்லை"
### சிவாஜி கணேசன் சொல்கிறார்

(சென்னை)

இலங்கைத்தமிழர் பிரச்னையில் இந்திய ராணுவம் தலையிடுவது புத்திசாலித் தனமானது அல்ல என்று இந்திய ராஜ்ய சபை உறுப்பினரும் பிரபல நடிகருமான திரு. சிவாஜி கணேசன் கூறியுள்ளார்.

கும்பகோணத்தில் நிருபர்கள் மத்தியில் கருத்து வெளியிடுகையில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதற்குமுன்னதாக இந்திய

(8ம் பக்கம் பார்க்க)

## 'பிரபா' பற்றிய வதந்தி

(யாழ்ப்பாணம்)

"தமிழீழ விடுதலைப் புலிகள்" இயக்கத்தலைவர் திரு. பிரபாகரன் ஆயுதப்படைகளிடம் பிடிபட்டு விட்டதாக நேற்று யாழ்ப்பாணத்தில் ஒரு வதந்தி பரவியதால் பலர் "ஈழநாடு" காரியாலயத்துக்கும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு விசாரித்தனர். கொழும்பிலிருந்தே இவ் வதந்தி பரவியதாகக் கூறப்படுகின்றது.

## சுவரொட்டிகள் ஒரு மறுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் நகரின் சில இடங்களில் கடந்த 27ம் திகதி காணப்பட்ட சுவரொட்டிகள் தமது ஸ்தாபனத்தின் உத்தியோக பூர்வமானதல்ல என்று "தமிழீழ விடுதலைக் கழகம்" விடுத்துள்ள துண்டுப்பிரசுரம் ஒன்றில் தெரிவித்துள்ளது.

தமிழீழ மக்கள் விடுதலைக்கழக அரசியல்துறைச் செயலாளரினால் வெளியிடப்பட்டுள்ள இப் பிரசுரத்தில் குறிப்பிட்ட சுவரொட்டிகள் வேண்டுமென்றே திட்டமிட்ட செயல் என்று தாம் கருதுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஈ)

## யாழ்-கொழும்பு ரயில் சேவை: புதன் முதல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - கொழும்பு கடுகதிசேவை நாளை புதன் முதல் தொடக்கம் ஆரம்பமாகவுள்ளதாக யாழ். புகையிரத நிலைய அதிபர் திரு. [illegible] தெரிவித்துள்ளார்.

புதன்கிழமை இன்டர்சிற்றி சேவையும், வியாழக்கிழமை யாழ்தேவி சேவையும் நடைபெறவுள்ளதாகவும் அவர் சொன்னார்.

யாழ்ப்பாணத்தில் சிலவாரங்களுக்கு முன்னர் இடம்பெற்ற சம்பவங்களைத் தொடர்ந்து யாழ்-கொழும்பு புகையிரத சேவை நிறுத்தப்பட்டு இளி நொச்சிக்கும் - கொழும்புக்குமிடையே நடாத்தப்பட்டு வந்தது தெரிந்ததே. (ஈ)

### மினிபஸ் நேரக் கணிப்பாளர்
## தாக்கப்பட்டது பற்றி விசாரிக்க
### உயர் பொலிஸ் அதிகாரி நியமனம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை மினிபஸ் நேரக்கணிப்பாளர் கணேசலிங்கம் பொலிசாரால் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக விசாரணை செய்வதற்கு பொலிஸ் அதிபர் திரு. தவலிங்கம் நியமிக்கப்பட்டுள்ளார்.

பொலிஸ் அதிபர் திரு. ரி. ஈ. ஆனந்தராசாவுக்கு இச் சம்பவம் பற்றி புகார் செய்யப்பட்டதையடுத்து அவர் விசாரணைக்கு உத்தரவிட்டார்.

காங்கேசன்துறை பொலிஸார் தினமும் ஒரு மினிபஸ்ஸை எடுத்து தமது தேவைக்குப் பாவித்து வந்ததாகவும் பொலிஸ் அதிபரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. இனிமேல் அத்தியாவசிய தேவைக்கு மட்டுமே மினிபஸ்ஸைப் பாவிக்க வேண்டும் என பொலிஸ் அதிபர் பணித்துள்ளார்.

வடபகுதி மினிபஸ் சங்க போஷகர் திரு எ. தியாகராசா செயலாளர் திரு [illegible] ஆகியோர் நேற்றுக்காலை அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையாவிடம் புகார் செய்தனர். இதைத்தொடர்ந்து அரசாங்க அதிபர் பொலிஸ் அதிபருடன் தொடர்பு கொண்டார்.

இதன்பின் அவர்கள் பொலிஸ் அதிபரிடம் நேரில் சென்று சம்பவம் பற்றி புகார் செய்தனர். இதைத்தொடர்ந்து பொலிஸ் அதிபர் விசாரணை நடத்துமாறு உத்தரவிட்டார்.

மினிபஸ் சேவை இன்று செவ்வாய்க்கிழமை வழக்கம்போல் நடைபெறும் என்று வடபகுதி மினிபஸ் சங்க போஷகர் திரு. ஏ. தியாகராசா தெரிவித்தார். (ஈ)

### மட்டக்களப்பில் சுடப்பட்டு
## கொல்லப்பட்டவர் 'உமா'வுக்கு அடுத்த தலைவராம்
### பொலிசார் தெரிவிக்கின்றனர்

(கொழும்பு)

அண்மையில் மட்டக்களப்பில் பொலிசாரினால் சுட்டுக்கொல்லப்பட்ட இராசதுரை வசந்தச்சந்திரன் தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் முக்கிய உறுப்பினர் என பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரிய வருவதாக அறிவிக்கப்பட்டது.

திரு உமா மகேஸ்வரனுக்கு அடுத்தாக தமிழீழ விடுதலைக் கழகத்தின் முக்கிய தலைவராம் இவர். 29 வயதுடைய இவர் அண்மைக்காலங்களில் திருகோணமலை மாவட்டத்தில் நடைபெற்ற பல பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக இருந்து நடாத்தியவர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜூலைக் கலவரத்தின்பின் தமிழீழ மக்கள் விடுதலைக்கழகத்தால் இவருக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டதாம். பல பயங்கரவாத நடவடிக்கைகளை வெற்றிகரமாக நடத்திய இவர் மட்டக்களப்பு சிறையுடைப்பு குழுவினருக்கு

(8ம் பக்கம் பார்க்க)

### நேற்று நடந்த
## மினிபஸ் ஊழியர் வேலைநிறுத்தம்

(மானிப்பாய்)

காங்கேசன்துறை மினிபஸ் நேரக்கணிப்பாளர், திரு சதாசிவம் கணேசலிங்கம் நேற்றுக்காலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளதைத் தொடர்ந்து சுமார் 85 மினிபஸ் ஊழியர்கள் நேற்று வேலைநிறுத்தம் செய்தனர். பிரயாணிகளும் மாணவர்களும் கஷ்டப்பட்டனர்.

ஏழாலையைச் சேர்ந்த 33 வயதான நேரக்கணிப்பாளர்

(8ம் பக்கம் பார்க்க)

# சூடானில் அவசரகால சட்டம் பிரகடனம்!

# பொதுக் கூட்டங்கள், ஊர்வலங்கள் தடை!!

## நெருக்கடி நிலைமை உருவாகியுள்ளதாம்

கார்ட்டூம், ஏப். 30

சூடானில் அவசரகால நிலைமை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அரசியல் அமைப்புச் சட்டத்தின் சில ஷரத்துக்கள் பாதுகாப்பு கருதி இடைநிறுத்திவைக்கப்பட்டுள்ளன.

நேற்று பிறப்பிக்கப்பட்டுள்ள இந்த அவசரகாலச் சட்டத்தின்பிரகாரம் நாட்டில் பொதுக்கூட்டங்கள், ஊர்வலங்கள் நடத்துவது தடை செய்யப்பட்டுள்ளது.

நாட்டின் பாதுகாப்பு தொடர்பான சகல அதிகாரங்களும் பாதுகாப்பு படையினரின் கையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

நாட்டின் நிலை குறித்து வானொலியில் நேற்று உரையாற்றிய ஜனாதிபதி ஜாபர் நிமேரி இந்த அறிவிப்பை விடுத்தார்.

உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் தமது அரசாங்கத்துக்கு எதிராக ஆக்கிரமிப்பு வேலைகள் நடைபெற்று வருவதாகவும் இதனைத் தடுக்கும் முகமாகவே இந்த அவசரகாலச்சட்டம் கொண்டுவரப்பட்டதாகவும் அவர் தனது வானொலிச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

ஆயினும் சூடானில் அவசரகாலச்சட்டம் பிறப்பிக்கப்பட்டதற்கான நேரடிக்காரணம் எதுவும் தெரியவில்லை.

உள்நாட்டில்பெருநெருக்கடியும், வெளிநாட்டில் லிபியாவினதும் எதியோப்பியாவினதும் அச்சுறுத்தலுக்கும் உள்ளாகியிருக்கும் சூடானில் தற்போது பிறப்பிக்கப்பட்டிருக்கும் அவசரகாலச்சட்டம் அந்நாட்டின் பெரும் அரசியல் நெருக்கடி உருவாகியிருப்பதனையே புலப்படுத்துகிறது. (சூ)

## இந்தியஉபகண்டத்தில் ஆயுத விற்பனை:

# அமெரிக்கா இந்தியாவுடன் பேச்சு நடத்தவேண்டும்

வாஷிங்டன், ஏப். 30

அமெரிக்கா இந்திய உபகண்டத்திலுள்ள நாடுகளுக்கு ஆயுதங்களை வழங்குவது குறித்து அமெரிக்க காங்கிரஸ் இந்தியாவுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தவேண்டுமென்று அமெரிக்க செனட்சபை வெளியுறவுக் கமிட்டி பரிந்துரை வழங்கியுள்ளது.

அமெரிக்கா இந்தியாவின் அயல்நாடான பாகிஸ்தானுக்கு அதிக அளவான ஆயுதங்களை வழங்கிவருவது தொடர்பாக அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்குமிடையிலான உறவுகள் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளன. இவ்வாறான ஆயுத விற்பனை தொடர்பாக அமெரிக்கா தமது நிலையை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று இந்தியா பலமுறை அமெரிக்காவிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதனைக்கருத்திற்கொண்டே அமெரிக்கவெளியுறவுக்கமிட்டி இந்த அறிவிப்பை விடுத்துள்ளது. கமிட்டியின் இந்த அறிவிப்பு இந்தியாவுடன் அமெரிக்கா சுமுகமான உறவை ஏற்படுத்தவேண்டுமென்பதனையே வற்புறுத்துவதாகத் தெரிகிறது. (சூ)

## வட்டுக்கோட்டைத்தொகுதி

# கல்வி அபிவிருத்திக்கான நிதி ஒதுக்கீடு

(பண்டத்தரிப்பு)

இவ்வருட பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின்கீழ் வட்டுக்கோட்டைத் தொகுதி கல்வி அபிவிருத்திக்காக ஒதுக்கீடுசெய்யப்பட்டிருக்கும் நிதி ஒதுக்கீட்டு விபரம் பின்வருமாறு!

பண்டத்தரிப்பு ஜசிந்தா வித்தியாலயத்தில் மாடிக் கட்டடம் அமைப்பதற்கு ஒரு லட்சத்து 60 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

வட்டுக்கோட்டை திருஞான சம்பந்தர் வித்தியாலயத்தில் மாடிக்கட்டிடம் நிறுவுவதற்கு ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது

வட்டுக்கோட்டை திருநாவுக்கரசு வித்தியாலயத்தில் வகுப்பறை மண்டபக் கட்டடம் அமைப்பதற்கு 80 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

காரைநகர் ஊரி அமெரிக்க மிஷன் த. க. பாடசாலையில் கட்டடம் நிறுவுவதற்கு 80 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

தொல்புரம் அமெரிக்கமிஷன் த. க. பாடசாலையில் கட்டடம் நிறுவுவதற்கு 80 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது

சுழிபுரம் கிழக்கு அமெரிக்க மிஷன் த. க. பாடசாலையில் கட்டடம் நிறுவுவதற்கு 45 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் தொடர் கட்டட வேலைகளை பூர்த்தி செய்வதற்காக 40 ஆயிரம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

# இடி வீழ்ந்து 4 பேர் பலி

(மதுரை)

மதுரையிலுள்ள பட மாளிகையொன்றின் மீது இடி வீழ்ந்ததினால் 4 பேர் இறந்துள்ளனர். 45 பேர் காயமடைந்துள்ளனர்.

பெருமழை பெய்து கொண்டிருந்த சமயம் வீழ்ந்த இந்த இடியினால் படமாளிகை இடிந்து வீழ்ந்தது. அங்கு படம் பார்த்துக்கொண்டிருந்தவர்கள் இந்த தாக்குதலுக்கு இலக்கானார்கள்.

இந்த 49 பேரும் பின்னர் கட்டட இடிபாடுகளுக்கிடையேயிருந்து மீட்கப்பட்டனர். இவர்களில் நால்வர் மருத்துவமனையில் காலமானார்கள். 5 பேர் நிலைமை மோசமாகவுள்ளது. 40 பேர் சாதாரண காயங்களுடன் சிகிச்சை பெற்று வருகின்றனர். (சூ)

## தீயணைக்கும் படைக்கு

# பண்ணைமீன் சந்தை குத்தகைப்பணம்!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபையின் பண்ணை மீன் சந்தையிலிருந்து பெறப்படும் குத்தகைப்பணம் முழுவதையும், யாழ். மாநகர சபையால் நிறுவப்படும் தீயணைக்கும் படைக்கு அன்பளிப்பாக வழங்க யாழ். ப. நோ. கூ. சங்க இயக்குநர்சபை முடிவு செய்துள்ளது.

மேற்படி மீன்சந்தை கடந்த ஜனவரி முதலாம் திகதி தொடக்கம் குத்தகைக்கு யாழ். மாநகரசபை விடுத்திருந்த போதிலும் எவரும் குத்தகை எடுக்க முன்வரவில்லை. இதனை அடுத்து யாழ். ப. நோ. கூ. சங்க இயக்குனர் சபை மே 1-ம் திகதி எடுக்க முடிவு செய்திருந்ததுடன் அதிலிருந்து பெறப்படும் குத்தகைப் பணத்தையும் யாழ். மாநகர தீயணைக்கும் படைக்கு வழங்குவதென தீர்மானித்துள்ளது. (மா)

## புதிய தலைவர்

புதுடில்லி ஏப். 30

மிசோராம் சட்டசபையில் புதிதாக தெரிவு செய்யப்பட்ட இந்திரா காங்கிரஸ் உறுப்பினர்கள் தமது தலைவரைத் தேர்ந்தெடுக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை மிசோராமின் முன்னாள் முதலமைச்சர் பிரிகேடியர் லசோ தமது மந்திரி சபையின் ராஜினாமாவை கவர்னரிடம் கையளித்துள்ளார்.

சென்றமுறை பதவிலிருந்த இவரது கட்சி மாநாட்டு சபை இத்தேர்தலில் 8 இடங்களை மாத்திரம் கைப்பற்றியுள்ளது. (சூ)

## சிரமதானம்

(வண்ணார்பண்ணை)

திருநெல்வேலி தெற்கு பிள்ளையார் வீதியில் பொதுமக்கள் போக்குவரத்திற்கு இடையூறாக இருந்து வந்த இடங்கள் இப்பகுதி பொதுமக்களால் சிரமதானமூலம் நிரப்பப்பட்டன

கடந்த ஞாயிற்றுக்கிழமை திரு. எம் சண்முகம் தலைமையில் நடைபெற்ற இச்சிரமதான வேலை பலாலி வீதி முகப்பிலிருந்து பிள்ளையார்வீதிக்கு ஆரம்பிக்கப்பட்டது.

# மட்டக்களப்பில் மலையக அகதிகளுக்கு புனர்வாழ்வு!

(இரா. உதயகுமார்)

அண்மையில் ஏற்பட்ட ஜூலை கலவரத்தின் பின்பு மட்டக்களப்புக்கு இடம் பெயர்ந்த 500 மலையக குடும்பங்களுக்கு மட்டக்களப்பு திருமலை மறைமாவட்ட ஆயர் இல்லத்தின் அனுசரணையுடன் தற்போது புனர்வாழ்வு வழங்கப்பட்டு வருகின்றது.

மறைமாவட்ட ஆயர் கிங்கிலி சுவாம்பிள்ளை மேற்கொண்ட நடவடிக்கையின் பிரகாரம் இப் புனர்வாழ்வு திட்ட நடவடிக்கைகளுக்காக இரண்டு இலட்சம் ரூபாய் செலவில் 10 இடங்களில் காணிகள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம் பின்வரும் இடங்களில் காணிகள் கொள்வனவு செய்யப்பட்டு குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டுள்ளார்கள்.

வாழைச்சேனை 67 ஏக்கரில் 184 குடும்பங்கள், ஒல்லிக்குளம் 10 ஏக்கரில் 17 குடும்பங்கள், தாழங்குடா 5 ஏக்கரில் 20 குடும்பங்கள், தாழங்குடா (ஆ) 13 ஏக்கரில் 40 குடும்பங்கள், கிரான்குளம் 14 ஏக்கரில் 30 குடும்பங்கள்.

தேற்றாத்தீவு 9 ஏக்கரில் 14 குடும்பங்கள், சத்துருகொண்டான் (அ) 18 ஏக்கரில் 50 குடும்பங்கள், சத்துருகொண்டான் (ஆ) 6 ஏக்கரில் 20 குடும்பங்கள், புதுக்குடியிருப்பு 10 ஏக்கரில் 35 குடும்பங்கள், சந்திவெளி 20 ஏக்கர் 40 குடும்பங்கள் இப்புனர்வாழ்வு திட்டத்தில் குடியமர்த்தப்பட்டுள்ளார்கள்.

இப்புனர்வாழ்வு காணிகளில் தாழங்குடா, தேற்றாத்தீவு, காணிகள் தேவாலயத்திற்குரியவை. கிரான்குளம், புதுக்குடியிருப்பு காணிகள் இருவரால் அன்பளிப்பு செய்யப்பட்டவையாகும்.

ஆயித்தியமலை 18, உன்னிச்சை 20, மரப்பாலம் 34, பன்சேனை 15, புல்லுமலை 10 என்ற அடிப்படையில் குடியேறிய குடும்பங்களுக்குரிய காணிகள் குடியேற்ற காணியாக இருப்பதால் இவர்களுக்கு இருப்பிடங்கள் அமைப்பதற்கான உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது. இத்துடன் உதவி மாவட்டத்தில் பரவலாக நிலம் வாங்கியும், அன்பளிப்பாகப் பெற்றும் குடியேறிய சுமார் 100 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஆயர் இல்லம் கொள்வனவு செய்த காணிகளில் குடியேற்றப்பட்டவர்களின் புனர்வாழ்வு பின்வரும் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது

முதற்கட்டத்தில் தற்காலிக வீடுகள் அமைக்கப்பட்டு பொதுமலசுடம், பொதுக்

[7ம் பக்கம் பார்க்க]

★ ஸ்பெயின் ★ இத்தாலி ★ பிரான்ஸ்
★ சுவிற்சலாந்து ★ கனடா
சகாய விலையில் ரிக்கட்டுகளுக்கும்
பிரயாண ஒழுங்குகளுக்கும்
AIR-TRANSIT
TRAVEL CONSULTANTS
99-2/56 B, கபூர் பில்டிங்
2-வது மாடி கொழும்பு-1.
போன்: 549365
538 B ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 22689

